
கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

கவிதைகளில்

# தாய்மை உணர்வுகள்





மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்

மூதூர். எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


- நூலின் பெயர் :- கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்.
- விடயம் :- ஆய்வு.
- நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- ஒக்டோபர் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 200/=
- ISBN :- 978-955-41569-9-9
- தொடர்புகளுக்கு :- 0776288299




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராணம் ஹஜ்ரத்துக் காண்டம் - உரை நூல் (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்.
9. நாயகக் காவியம். (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஸ்ரஃப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் - ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் - ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. படகு மூழ்கிய காவியம்.
24. மூதூர் சுனாமிக் காவியம்.
25. மனையாள் மாட்சிமைக் காவியம்.
26. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்.
27. மூதூர் எம்.எம்.ஏ.அனஸின் நன்னெறிக்குறள்.
28. சிறுவர் கவிப்பேழை.
29. கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீனின் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னரும் தந்தையின் மிக நெருங்கிய நண்பரும், பிரபல சமூக சேவையாளரும், எனது மாமா முறை உறவினருமாகிய மர்ஹூம்

அல்ஹாஜ் கே. ஜெயினுத்தீன் அவர்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மூதூருக்கு வருகை தந்திருந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்துறைப் பேராசிரியர் கலாநிதி. றமீஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கு எனது சகோதரன் எம். எம். எம். அப்பாஸ் என்பவர் எனது தந்தையார் அவர்களின் கவிதைகள் அடங்கிய "மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்" என்ற நூலைக் கொடுத்திருந்தார். அக்கவிதைகளையெல்லாம் படித்து அதன் வசீகரத்தில் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களும் மூழ்கிப் போயிருந்தார். அன்றைய நாள் இரவு எனது வீட்டுக்கு அவர் வருகை தந்தார். அப்போது அவர் என்னிடம் கூறினார். " அனஸ்.... நிறையக் கவிதைகள், காவிய நூல்கள் என்றெல்லாம் நீங்கள் எழுதியுள்ளீர்கள். வாழ்த்துக்கள், நன்றிகள் தொடர்ந்தும் எழுதுங்கள் என்று என் எழுத்துப் பணியைத் தட்டிக் கொடுத்துவிட்டு, தொடர்ந்தும் கூறினார்.

"அனஸ் இன்று உங்கள் தம்பி அப்பாஸ் என்னிடம் உங்கள் வாப்பாவின் கவிதைகள் அடங்கிய புத்தகத்தை தந்தார். நான் அவற்றைப் படித்து பார்த்தேன். அந்தக் கவிதைகள் எல்லாம் ஓர் இனம் புரியாத வசீகரத் தன்மையும், உயிரோட்டம் மிக்கதாகவும் கவிவரி வார்த்தைகள் எல்லாம் இயற்கையாக வந்தமைந்து அழகுற்றிருப்பதையும் காண்கின்றேன். மேலும் அவர் அனஸ் உங்களுடைய கவிதைகளை விடவும் உங்கள் வாப்பாவுடைய கவிதகள் உயரியதாக இருக்கின்றது என்ற யதார்த்தத்தையும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே என் தந்தை மர்கூடம் எஸ்.எல்.எம் முகைதீன் அவர்களின் கவிதைகளுக்கு மிகவும் காத்திரமான இடத்தை என் இதயம் வழங்கியிருந்தது. அவர்களின் கவிதைகளை பாவேந்தன் பாரதியார் கவிதைகளோடும், பாரதிதாசன் கவிதைகளோடும் சம இடத்தில் வைத்தேதான் நான் நோக்கி வந்தேன். எனினும் நான் வெளியில் எவரிடத்தும் இக்கருத்தை கூறவில்லை. காரணம் அவர் எனது தந்தையல்லவா! தந்தையின் கவிதையின் கனத்தை தனயன் யான் உரைப்பது தகுசெயல் அல்லவே! என்று எனக்குள் என் அளவீட்டை அடக்கி வைத்திருந்தேன்.

ஆனால் இன்று தமிழ்த்துறைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்கள் என் தகப்பனாரின் கவிதை உயர்ச்சியை, உன்னதத்தை உரைத்தமையானது எனது மதிப்பீட்டை அர்த்தமுறச் செய்துவிட்டது என்று எண்ணி பெரும் மகிழ்ச்சியுறுகின்றேன். எனது தந்தையார் மர்கூடம் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் நிறையக் கவிதைகள் எழுதாவிட்டாலும், எழுதிய சொற்பத்தொகைக் கவிதைகள் எல்லாம் ஆழமான கருத்துக்களையும் அவை பற்றிய தத்துவங்களையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

எனது தந்தையார் மர்கூம் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்களின் கவிதைகள் பாரதியார் கவிதைகள், பாதிதாசன் கவிதைகள் போன்று மிகவும் உயரிய ஸ்தானத்தில் இருப்பதை ஒரு கவிஞன் என்ற வகையிலே நான் அறிந்து கொண்டு, அவ்வபிப்பிராயத்தை என் உள்ளத்துள்ளேயே வைத்திருந்தேன். வெளியில் யாருக்குமே சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் தந்தையின் கவிதையை தனயன் நான் புகழ்வதாக என்னைத் தவறாக எடைபோடக்கூடும் என்பதனால், எனவே தமிழ்த்துறைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் அவர்களின் கணப்பீடு எனது தந்தையின் கவிதை எத்தகைய உயர்ச்சி மிக்கது என்பதை இலக்கிய உலகுக்கு எடுத்தியம்பிக் கொண்டிருக்கும்.

“ நிர்வாண உலகில் ஆடை அணிந்தவன் அசிங்கமானவன்’ என்பது போல கவிவரிகள் எழுதத் தெரியாதவர்களுக்குக் கவிஞன் என்ற வார்த்தை கூடக் கசப்பாகத் தான் இருக்கும். யாரிடமும் சென்று கவிகளோ, இலக்கியமோ கற்றுக் கொள்ளாமல் இறைவனின் அருளால் பாடக் கூடிய வல்லமையை உலகில் இறைவனும் அரிதாகவே வழங்குகின்றான். அந்தவகையிலே எனது தந்தையார் ஓரளவு தமிழ் கற்றறிந்தவராக இருந்தாலும், கவியாற்றலும் நாவன்மையும் இறையருளால் அவர்களுக்குக் கிட்டிய வரமென்றெ நான் கருதுகின்றேன். அவர்களை ஓர் அருட் கவிஞராகவே காண்கின்றேன்.

ஏற்கனவே கவிஞர் மர்கூடம் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்களின் கவிதைகளை ஆய்ந்து

1. கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம்.

2. கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இரு நூல்களை வெளியீடு செய்தேன். இன்று அவரின் கவிதைகளின் மூன்றாவது ஆய்வு நூலாக "கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்" என்ற இந்நூலை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். ஒவ்வோர் மனிதனும் தன் தாயின் மீது அதியுச்ச பாசமும் பற்றும் மிக்கவனாகத் திகழ வேண்டும். அத்தகு தாய்மை உணர்வுகளைத் தூண்டுவதற்கு இந்நூல் ஓர் உந்துசக்தியாக இருக்கும் என நம்புகின்றேன்.

நன்றி.

எம்.எம்.ஏ. அனஸ்
12.08.2019

மட்டக்களப்பு வீதி,
பெரிய பாலம்
மூதூர் – 05
தொடர்புகளுக்கு – 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன்

சேற்றிலே முளைத்த செந்தாமரையாய், கூழாங்கல்லிடை உருவான மாணிக்கமாய் மூதூர் தக்வாநகர் வட்டம் எனும் கிராமத்தில் சதக்கு லெவ்வை அசியா உம்மா, என்பவர்களுக்கு மகனாக 08.05.1937ம் ஆண்டு கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் பிறந்தார். இந்த வட்டம் எனும் பிரதேசத்தின் ஸ்தாபகரும், ஸ்தாபக குடிமகனுமாக இவருடைய தந்தையார் சீனிமெய்யதீன் சதக்கு லெவ்வை அவர்களே இருந்தார். இவர் வட்டத்து மண்ணில் குடியேறியது விவசாய நோக்கத்திற்காகவேயன்றி கடலை அண்மித்திருப்பதன் கரணமாக மீன்பிடிதொழிலை நோக்கமாகக் கொண்டல்ல. " போடி கந்தர " என்னும் உயரிய விவசாயப் பரம்பரையைச் சேர்ந்த சதக்கு லெவ்வை அவர்கள் வட்டத்து மண்ணிலே மா, பலா, தென்னை, போன்ற பல்லாண்டு பயிர்களையும், மரவெள்ளி, வற்றாளை போன்ற சிறு பயிர்செய்கையிலும் ஈடுபட்டு அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொண்டார். இன்றும் இந்த வட்டத்து மண்ணில் சதக்கு லெவ்வை அவர்களின் குடும்பத்தவர்களே அதிகம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் தனது ஆரம்பக்கல்வியை மூதூர் கோட்டையாற்று பள்ளிக்கூடத்தில் (இன்றைய மூதூர் மத்திய மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையில் கற்றார்.) வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்ட இவர் நிறைய நூல்களை வாசித்தறிந்து தன் அறிவை விரிவாக்கிக் கொண்டார். அத்துடன் இவர் இயற்கையாகவே அறிவு, ஞானம் வாய்க்கப் பெற்றவராகவும் திகழ்ந்தார். ஐம்பெருங்காப்பியங்கள், திருக்குறள், சீறாப்புராணம், திருக்குர்ஆன், தெளிவுரை, ஹதிஸ் கிரந்தங்கள் போன்ற பல்வேறுபட்ட நூல்களையும் வாசித்தறிந்து அவற்றில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார். இதனால் தமிழ் இலக்கிய அறிவும், சன்மார்க்க அறிவும், பொதுஅறிவும், அரசியல் ஞானமும் இவரை அணிசெய்து நின்றன. தூரநோக்கும், பரந்த சிந்தனையும் இவரை மேலும் மெருகூட்டின.

இவர் ஓர் ஞானியாக, மேதையாக, ஓர் மாமனிதராக எம்மத்தியில் வாழ்ந்து, மறைந்து போன ஓர் பெருந்தகை. இவரைப் பற்றிய உண்மையான தெளிவு ஊரில் அநேகருக்குத் தெரியாது எந்த இடத்திலும், எவ்வேளையிலும், எவ்விடயத்தையும் நன்கே கதைக்கும் தத்தவமும், திறனும் கொண்டவராக காணப்பட்டார். உண்மை, நேர்மை, நீதி மனுதர்மம் என்பவற்றிற்கு உயரிய இலக்கணமாகவும், முன்மாதிரியாகவும் இவ்வூரில் வாழ்ந்தார். பணத்திற்கோ, அதிகாரத்திற்கோ என்றுமே அடிபணியாதவர். நல்ல உடலமைப்பும், பலமும், உயரமும், தோற்றமும் இவருடன் யாரும் மோதுவதற்கு அச்சத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில் பிழையைக் காணின் அதிகம் கோபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடியவராகவும் காணப்பட்டார். பாம்பின் காலை பாம்பு தான் அறியும் என்பதற்கொப்ப அவருடைய தாய் தன்மகனின் பலத்தையும், கோபத்தையும் நன்கறிந்திருந்த தனால் மகனே! நீ யாரிடமும் சண்டையிடக் கூடாது. அப்படி சண்டையிட்டால், நான் உனக்கு ஊட்டிய பால் "கறாம்" (விலக்கப்பட்டது) ஆம் எனக்கூறி இவரிடம் சத்திய வாக்கைப் பெற்றதாக அறியக்கூடியதாக உள்ளது. இதனால் அவர் பிறருடன் சண்டையிடுவதை தவிர்த்தவராகவே வாழ்ந்து வந்தார்.

மேலும் கறைபடியாக் கரம் இவர் உடைமையாகும். தன் உடலில் ஓடுகின்ற ஒவ்வோர் துளி இரத்தமும் தன் நேர்மையான உழைப்பின் மூலம் ஓடுவதாகவே இருக்க வேண்டும். அதே போல் தன் குழந்தைகளுக்குத் தான் ஊட்டுகின்ற உணவுகளும் தூய உழைப்பினாலானதாக இருக்க வேண்டும் என்பதில் மிகமிகக்கரிசனையாக இருந்தார். தனக்கு எது நேர்ந்தாலும் எல்லாம் இறைவன் விதிப்படித்தான் நடக்கிறது என்பதில் மிக உறுதியாக இருந்தார். எதையும் தாங்கும் மனோ வலிமையும் திடனும் கொண்டிருந்தார். இறையச்சம் கூடிய ஒருவராகக் காணப்பட்டார்.

இவர் ஓர் விழாவிலோ, கூட்டத்திலோ, உரையாற்ற எழுந்துவிட்டால் அவர் அக்கணம் ஓர் நாவலராக மாறிவிடுவார். அடுக்கு மொழிகளுடன், திருக்குர்ஆன் உதாரணமும், திருநபியின் கூற்றுக்களும், திருக்குறளும் தமிழ் இலக்கியச் செய்யுள்களும், பொன்மொழிகளும் அவர்வாயில் இருந்து வளமாக, வரமாக வந்து கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஓர் மனிதனின் வாய்வார்த்தைகளில் இருந்தும், அவன் நடை, உடைகளில் இருந்தும், அவன் எப்படிபட்டவன்

என்பதையும், அவன் உள்ளத்தில் பொதிந்திருக்கும் விடயங்களையும் அறிந்து கொள்ளும் அபார அற்றல் பெற்றிருந்தார். இன்றைய ஓர் விடயம் நாளை எவ்வாறு இருக்குமென்று முன்கூட்டியே சொல்லக்கூடிய தீர்க்கதரிசனப் பார்வையும் பெற்றுத் திகழ்ந்தார். மகாகவி அல்லாமா இக்பாலுக்கு இறைவன் வழங்கிய "ஒளிமிகு பார்வையைப் போல்" கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீனுக்கும் இறைவன் ஒளிமிகு பார்வையை வழங்கியிருந்தான். அதன் காரணமாக எந்த ஓர் விடயத்திலும் உடனுக்குடன் எது சரி, எது பிழை என்று உணரக்கூடிய உயரிய தன்மை பெற்றிருந்தார்.

புன்னகையும், புதுப்பொழிவும் என்றும் என்றும் இவர் முகத்தில் தவழும். எனது உடன் பிறந்த சகோதரர் மார்கூடம் ஏ.சி. கபீர் முகம்மது (அதிபர்) அவர்களின் மிகமிக நெருங்கிய நண்பர் இவர். இவரும் எனது சகோதரர் ஏ.சி. கபீர் முகம்மது அவர்களும் ஒன்றாகக் கூடிவிட்டால் அங்கே உரையாடல் கலைக்கட்டிவிடும்.

நகைச்சுவையும், கலகலப்பும், சிரிப்பொலியும் மேலோங்கி நிற்கும்.

அன்று படிப்பின் வாசனையே அற்றிருந்த மூதூர் அக்கரைச்சேனைப் பகுதியில் ஓர் பாடசாலை உருவாக (தி / அல்ஹிலால் மகாவித்தியாலயம்) மிகவும் பாடுபட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் முக்கிய ஸ்தாபகர். இவர் காட்டுக்குச் சென்று கம்புத்தடி வெட்டிவந்து கலைக்கூடம் கட்டிவிட்டு, ஒதுக்கிச் சென்றுவிடவில்லை. தான் மரணிக்கும் வரைக்கும் அல்ஹிலாவின் வளர்ச்சிப்படிகளில் தனது காலை நன்கு பதித்தவர். அப்பாடசாலையின் அபிவிருத்திக் குழுச் செயலாளர், உறுப்பினர் என்றெல்லாம் வருடக் கணக்கில் பதவி வகித்தவர். நான் தி/அல்.ஹிலால் மகா வித்தியாலத்தின் அதிபராக் கடமையாற்றிய கால கட்டத்திலும் எனக்கு பள்ளிக்கூட விடயத்தில் அதிகூடிய ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நல்கினார். நானும் பலவிடயங்களில் அவரின் ஆலோசனையைப் பெற்று கலைக்கூட உயர்ச்சிக்காகச் செயல்பட்டதை மீட்டுப் பார்க்கின்றேன். கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்களை இவ்வேளையில் மிகவும் மரியாதையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

மேலும் இவர் இந்த ஊரில் மீனவர்களின் உயர்ச்சியைக் கருத்தில் கொண்டு முதலாவது மீன்பிடி சங்கத்தை ஸ்தாபித்தார். தொடர்ந்தேர்ச்சியாகத் தானே அச்சங்கத்தின் செயலாளராகத் கடமையாற்றி மீன்பிடி அதிகாரிகளுடனும், அரசியலவாதிகளுடனும் தொடர்பு கொண்டு, பல பெரிய மீன்பிடி இயந்திரப் படகுகளை முதன்முதலாக மூதூர் மீனவர்கள் பெற வழிவகுத்தார்.

அதே போல் அக்கரைச்சேனை கிராம முன்னேற்றச்சங்கத்தின் தலைவராகவும் தொடர்தேர்ச்சியாக பல வருடங்கள் பணியாற்றி இப்பகுதியின் பல்வேறுபட்ட அபிவிருத்திக்கும் முக்கிய மூலவராகத் திகழ்ந்தார். அக்கரைச்சேனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகைதீன் ஜும்மா பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் பல வருடங்கள் நற்பணியாற்றினார்.

மேலும் நெய்தல் நகர் ஹிழ்று ஜும்மா பள்ளிவாயல், வட்டம் ஜும்மா பள்ளிவாயல், தக்வாநகர் ஜும்மா பள்ளிவாயல் ஆகியவற்றின் முக்கிய ஸ்தாபகராவும் திகழ்ந்தார். அத்துடன் தான் வாழ்ந்த மூதூர் நெய்தல்நகர் பகுதியல் " மனாறுல் குதா " எனும் பெயரில் பெண்களுக்கான குர்ஆன் பாடசாலையின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இருந்ததுடன், அதன் செயலாளராகவும் கடமையாற்றினார். தான் மரணிக்கும் வரை தினமும் அதன் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

மேலும் அன்று எழுதப்படிக்கத் தெரியாத பிரதேசமாக இருந்த அக்கரைச்சேனைப் பகுதியில் பொதுமக்கள் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதுதல், விண்ணப்பம் நிரப்புதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கும் கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்களையே நாடிச்செல்வர். இவ்வாறு தன்னுடைய வாழ்வின் கூடிய காலப் பகுதியை சமூக சேவைக்காகவே அர்பணித்த ஓர் மாமனிதரைப் பற்றி இந்நூலில் எழுதக் கிடைத்தமையையிட்டு நான் உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் இவர் நாட்டு வைத்தியம், பேய், பிசாசு, மந்திரதந்திரங்கள், ஆத்மீக வைத்தியம் என்பவற்றிலும் நன்கு தேர்ந்தவராகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைசேனைப் பிரதேசத்தில் (வட்டம், தக்வாநகர் உட்பட) அவர் வாழ்ந்த காலத்தில் குழந்தையை பிரசவிக்கும் தாய்மார்கள் எல்லாம் இவர் ஓதிய வெற்றிலையைச் சாப்பிட்டால் பிரசவம் இலேசாக அமையும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். மேலும் இவர் தற்காப்புக்கலையான சீனடிசிலம்படி, கம்புவீச்சு போன்ற விளையாட்டு வித்தையிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

அத்துடன் இவர் இப்பிரதேசத்தில் பொதுமக்களின் பிரச்சினைகளான, குடும்ப பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், பணக்கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன பல பிரச்சினைகளுக்கும் தீர்வு கூறுவார். மக்கள் தீர்வு வேண்டி அதிகம் இவரையே நாடிச் செல்வர். இவருடைய தீர்ப்பை மரியாதையுடன் மக்கள் அதிகம் ஏற்றுக் கொள்வர். தம் வாழ்நாளில் இத்தகைய ஆயிரமாயிரம் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த பெருமனிதனின் பணியை மீட்டிப் பார்க்கும் போது அவர் மரியாதை என்னில் நிறைகிறது.

" போடிகந்தர " எனும் விவசாயப் பரம்பரையில் பிறப்பெடுத்த இவர் மிகச்சிறந்த விவசாயியாகவும் திகழ்ந்தார். மண்வெட்டி, கத்திதனை தன்கரத்தில் அவர் ஏந்திவிட்டால் அவருக்கு நிகராக யாருமே வேலை செய்ய முடியாது. வேகமும், அழகும் அவர்பணியை அணிசெய்து நிற்கும் அதேபோல் மிகச்சிறந்த வியாபாரியாகவும் காணப்பட்டார். (சில்லறை கடை, அரிசி ஆலை மொத்த விற்பனைக் கடைகளையும் நடத்தினார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழிலிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். கடலில் நீந்துதல், கடலின் அடியில் சுளி ஓடுதல் போன்றவற்றிலும் நல்ல அனுபவம் பெற்றிருந்தார். மேலும் இவரின் மூத்த மகன் எம்.எம்.ஏ. அனஸ் மூதூர் மத்திய மகா வித்தியாலம் (தேசிய பாடசாலை)யில் க.பொ.த (உ.த) கல்வி கற்ற காலப்பகுதியில், அப்பாடசாலையின் அபவிருத்திக் குழு உறுப்பினராகவும் இவர் இருந்து பணியாற்றினார்.

ஒரு பூரண மனிதனாக ஊரில் வாழ்ந்த பெரியார் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் மூதூரின் பெரும்புலவர் உமர்நெய்னார் அவர்களின் புத்திரியான சபியா உம்மா என்பவரைத் மணந்தார். இதன் மூலம் அவருக்கு

1. எம்.எம்.ஏ. அனஸ் (தொழில் உறவு அதிகாரி - இலங்கை துறைமுக அதிகார சபை)
2. எம்.எம்.ஏ. அஜீஸ் (போக்குவரத்து சபை - மூதூர் )
3. எம்.எம்.ஏ. அறூஸ் (வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்)
4. எம்.எம்.ஏ. அனிஸ் (ஆசிரியர் )
5. எம்.எம்.ஏ. அயாஸ் (வைத்தியர் )
6. எம்.எம்.ஏ. அப்பாஸ் (ஆசிரியர்) ஆகிய ஆறு மகன்களும்
7. அசறபா வகார்தீன்
8. மர்ளியா இம்டாட்
9. ஜாபிறா றவ்ஸ்தீன்
10. ஆபிதா முகைதின்

ஆகிய நான்கு பெண் மக்களுமாக மொத்தம் பத்துப் பிள்ளைச் செல்வங்கள் அவருக்குக் கிடைத்தன. அவரின் வாரிசாக இவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் உன்னத வாழ்வு வாழ்ந்த மாமனிதர் எஸ். எல். எம். முகைதீன் அவர்கள் 01.05.2008ம் திகதி தனது 71ம் வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

"ஓர் தந்தை தன் மரணத்திற்குப் பின் தன்தனயர்களில் வாழ்கின்றான்" என்ற தத்துவ மொழிக்கொப்ப கவிஞர் எஸ். எல். எம். முகைதீன் அவர்கள் மரணமடைந்து விட்டாலும் அவரின் நினைவாக அவரின் நிழலாக, அவரின் தனயர்கள் அவரின் கொள்கை செயற்பாடுகளின் நெறியே வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டு நான் பொதும் மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாக அவரின் மூத்த மகனான இந்நூலின் தொகுப்பாசிரியரும் எனது மாணவனுமான மூதூர் எம்.எம்.ஏ அனசைக் காணும் போதெல்லாம் எனக்கு அவரின் தந்தையின் ஞாபகம் தான் வரும். தன் தந்தையை போலவே சகல தன்மைகளும் பொருந்தியவராக இவரும் உள்ளமையைக் கண்டு நான் பெரிதும் உவகையுறுகின்றேன். கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லருள்புரிய வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

ஏ.சீ.எம்.மக்கீன்
(முன்னாள் அதிபர்)
பிரதன வீதி, மூதூர்
20.07.2014

(மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகள் நூலில் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன்
## கவிதைகளில் தாய்மை உணஉவுகள்

மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள் என்ற கவிதை நூலிலே கவிஞர் மர்கூடம் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் தன்தாயின் மீது கொண்ட தீராப் பற்றின் காரணமாக

- தாயவளை நித்தமும் கண்டுகளி.
- மாறா நினைவில் மாதா.
- வாட்டும் தாய் நினைவு.
- புனிதம் நிறைந்த என்தாயே!

ஆகிய நான்கு தலைப்புக்களில் நான்கு கவிதைகள் எழுதியுள்ளார். இக்கவிதைகளைப் படிக்கும் போது ஒவ்வொரு மனிதனும் தன் தாயின் மீது எத்தயை பற்றுடன் திகழ வேண்டும் என்ற உயரிய தாற்பரியத்தை உணரக் கூடியதாக உள்ளது. இத்தலைப்புகளிலான கவிதையின் ஒவ்வொரு கவி அடிகளையும் எடுத்து நோக்குகின்ற போது “தாயவளை நித்தமும் கண்டுகளி “ என்ற தலைப்பிலான கவிதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" கொண்டவள் அன்பினாலும் குழந்தைமேல் பாசத்தாலும்**
**கொள்தொழில் பிறசுமைகள் கூடி வருவதாலும்**
**உன்னை ஈன்றவளை உளத்தால் மறந்தாயேல்**
**உலகினில் நீயேதான் உயரிய பாவியாவாய்."**

தன்னுடைய மனைவி, குழந்தைகள் மேல் கொண்டுள்ள பாசத்தின் காரணமாகவும், தனது தொழில் முயற்சியின் காரணமாகவும் இதனுடன் பிற வேலைகள் காரணமாகவும் ஒருவன் தன்தாயை போய் சந்திக்காமல் இருந்தானேயானால், அவன் இந்த உலகத்தில் பெரும் பாவியாவான் என்று கவிஞர் எடுத்தியம்புகிறார். எத்தகைய சூழ்நிலையிலும் ஒருவன் தன்தாயை மறக்காமல் போய் பார்க்க வேண்டும் என்று கூறுகின்றார். இக்கவிதையின் அடுத்தவரிக் கவிதையில் கவிஞர்

**"உன்னுடை குழந்தைமேல் உனக் குள்ள பாசத்தால்**
**உன்னுளம் கலங்கிறதே உடனவ ரைக்காண**
**உன்னையும் காண்பதற்கு உள்ளம் துடிக்குமேதான்**
**உன்னுடை பெற்றொர்க்கு உணர்ந்தே நடந்திடுவாய்.**

எனப் பாடுகின்றார். ஒருவனுக்கு தன்னுடை குழந்தைமேல் பாசம் பெருக்கெடுக்கும் போது உடனே அக்குழந்தையைக் காண வேண்டும் என்ற உணர்வால் அவனின் உள்ளம் கலங்கிவிடும். அதே போல் அவனை ஈன்றெடுத்த பெற்றோரும், அவனின் நினைவால் அவனைக் காண்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித்தவிர்ப்பார்கள். இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் தன் பெற்றோரிடத்தே அடிக்கடி செல்ல வேண்டும். எனக் கவிஞர் அழகாக எடுத்தியம்புகின்றார்.

தொடர்ந்து கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் அக்கவிதையின் அடுத்த அடியில்

**" மடியில் இருக்கையிலும் மணமுடித் தபின்னாலும்**
**மாதாக் குச்சேய்நீ மறந்தா இருக்கின்றாய்**
**துடிக்குமே தாய்யுள்ளம் திடமுடன் யாவையும் நீ**
**துச்சமாய் விட்டெறிந்து துணிந்துசெல் தாயிடத்தே"**

இவ்வாறு பாடுகின்றார். ஒருவன் சிறுகுழந்தையாக இருக்கின்றபோது, தாயின் மடியில் இருக்கையிலும் அந்தத் தாய்க்கு அவன் மகன் தான். அவன் வளர்ந்து பெரியவனாகி திருமணம் முடித்த பின்பும் அந்த தாய்க்கு அவன் மகன்தான். இதை அவன் மறக்காமல் மற்றெல்லா விடயத்தையும் துச்சமென விட்டெறிந்து அடிக்கடி தாயிடத்தே செல்ல வேண்டும், என்று மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

இதே போல் தொடர்ந்தும் அக்கவிதையில் மற்றை அடியில் கவிஞர்

**" உணவும் தொகைப்பணமும் உடுதுணி யாவுமங்கு**
**உயர்வாய் அவளிடத்தே உண்டென் றிருக்கினறாய்**
**பணமே இருந்தாலும் பிரியமாய்ச் சேய்யுணவை**
**புசிக்க நாடுந்தே பெற்றோர் புரிந்திடுவாய்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கூறுகின்றார். ஆம், நாம் பெற்றோர்களிடம் வேண்டிய அளவு பணமும், உணவும், உடுதுணிகளும் இருக்கின்றது தானே, நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லைதானே! என்று எந்த ஒரு மகனும் எண்ணிவிடக் கூடாது. தங்களிடம் எவ்வளவு செல்வம் இருந்தாலும், தங்கள் பிள்ளைகள் கொண்டு வந்து தரும் உணவை உண்ண விரும்புவதும், பிள்ளைகள் கொண்டு வந்து தரும் ஆடைகளை அணிய விரும்புவதும் தான் ஒவ்வொரு பெற்றோரினதும் உண்மையான மனோநிலையாகும். எனவே பெற்றொரிடம் உணவு, உடைகள் இருக்கின்றது தானே நாம் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டிய அவசியமில்லையே என எந்தவொரு மகனும் எண்ணிவிடக்கூடாது எனக் கவிஞர் இக்கவி வரியில் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

மேலும் கவிஞர் இக்கவிதையின் இறுதி அடியில்

**" பட்டம் பதவிகளும் பல்வகை வசதிகளும்**
**பாலரும், பாவையையும் பார்த்தா இருக்கின்றாய்**
**கட்டித் தழுவியுந்தன் கால்களை முத்தமிட்ட**
**கருணைத் தாயவளை கண்டே களி நித்தம்."**

இவ்வாறு பாடுகின்றார். ஒருவன் தனது பட்டம், உயர் பதவி பல்வேறு வசதி வாய்ப்புக்கள், மனைவி, மக்கள் என்ற சுகபோகத்தில் மூழ்கி தன்னை ஈன்றெடுத்த தாய் தன்னைப் போய்ப் பார்க்காத நிலையில் இருந்து விடக்கூடாது. அவன் குழந்தையாக இருந்த போது அவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களையும் முத்தமிட்ட அந்தத்தாயை அவன் தினமும் போய்ப் பார்த்து அவளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் எனவும் கவிஞர் கூறுகின்றார்.

இதேபோல் கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் தனது மற்றைய கவிதையான " மாறாத் நினைவில் மாதா" என்ற தலைப்பிலான கவிதையின் முதலாம் அடியில்

**" அழியாது நெஞ்சினிலே அன்னையுரு வென்றும்**
**அழுதிடுமே உள்ளமதும் அவள்நினைவு வந்தால்**
**இழிவாகும் தாயவளை இதயத்தால் மறத்தல்**
**இறைபணியவ ளுக்காற்றல் ஈன்றமகன் கடனே"**

இவ்வாறு பாடுகின்றார்.

தன்தாய் உலகை விட்டுப் பிரிந்தாலும் அவளுடைய உருவம் தன்னுடைய உளத்தில் அப்படியே இருந்து கொண்டிருப்பதாகவும், தன்தாயுடைய நினைவு வருகின்ற போது தன் உள்ளத்தால் அழுவதாகவும், தன்தாயுடைய நினைவின்றி அவளை மறந்து வாழ்தல் இழிவான செயல் என்றும் அந்தத் தாய்க்காக வேண்டி நற்பணிகள், இறைபணிகள் செய்தல் ஒரு மகனுடைய கடனாகும் என்றும் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் " மாறா நினைவில் மாதா" என்ற கவிதையின் இரண்டாவது அடியில்

**" என்னருகில் இல்லையவள் என்னிதயத் துள்ளாள்**
**என்நாளும் மறைவழியை எடுத்துநடந் திடவே**
**எண்ணத்தில நிறைந்தெனக்கு ஏற்றநெறி காட்டும்**
**என்தாயின் மகிமையினை எப்படியான் சொல்வேன்."**

என்று பாடுகின்றார். இதில் தன்னுடைய தாய் தன் அருகில் இல்லா விட்டாலும், தன் இதயத்தில் இருந்து கொண்டு மார்க்க நெறிகளைப் பின்பற்றி நடக்குமாறு தனக்குக் கூறி, தகுந்த நெறியைக் காட்டிக் கொண்டிருக்கும் தன்தாயின் மகிமையை எப்படித்தான் பகர்வேன் என்று பெருமிதப்படுன்றார்.

இதே போல் அக்கவிதையில் அடுத்த அடியில் கவிஞர்

**" ஏராள முத்தங்கள் எந்நாளும் ஈந்து**
**ஏற்றபல எண்ணமுடன் என்னையுமே வளர்த்தாள்.**
**பாரினிலே நித்திரையைப் பல்லாண்டாய் எனக்காய்ப்**
**பறிகொடுத்த உருவத்தைப் பார்க்கின்றேன் மீட்டி"**

எனப் பாடுகின்றார்.

தன்தாய் தினமும் தனக்கு ஏராளமான முத்தங்களை ஈந்ததுடன், தன் மகனாகிய நான் வருங்காலத்தில் இச்சமூகத்தில் உன்னத இடத்தில் இருப்பேன் என்றெல்லாம் பல்வகையான எண்ணங்களையும் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் கொண்டிருந்தாள். அத்துடன் இரவில் என்னைப் பராமரிப்பதற்காக பல்லாண்டுகள் தன்னுடைய தூக்கத்தையும் இழந்த அந்தத் தாயினது உருவத்தை மீட்டிப் பார்ப்பதாகவும் சொல்கின்றார்.
இதே போன்று தாய்மை உணர்வில் திழைத்த கவிஞர் இப்பாடலில் மேலும்

**" பஞ்சணையும் தாய்மடிக்குப் பகரமென ஆகா**
**பால்பழமும் தேனுடனே பிறவுணவு யாவும்**
**மிஞ்சாதே தாயவளின் மகிழ்வுணவிற் குத்தான்**
**மேதினியில் தாயினது மகிமையதே மேன்மை."**

இவ்வாறு பாடுகிறார். ஆம் தாயின் மடியில் படுத்துறங்கும் சுகத்திற்குப் பஞ்சணைகூட நிகராகாது என்றும், தாய் அன்போடும் மகிழ்வோடும் ஊட்டுகின்ற உணவிற்கு நிகராக உலகில் வேறு எந்த உணவும் கிடையாது என்கிறார். இந்த உலகிலே தாயினுடைய மகிமை தான் மிக உயரியது என்றும் கூறுகிறார்.

இதேபோல் இந்த "மாறாத நினைவில் மாதா" என்ற தலைப்பிலான இந்தக் கவிதையின் அடுத்த அடியில்

**"பக்கத்தில் என்னையும் படுக்கவைத்துக் களிப்பாள்**
**பகலிரவு பாராமல் பணிவிடைகள் புரிவாள்**
**எக்குறையும் இல்லாமல் என்றுமெனை வளர்த்த**
**என்தாயின் நினைவாலே ஏங்கியழு கின்றேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய தாய் தன்னை தனக்குப் பக்கத்தில் படுக்க வைத்துச் சந்தோசமடைவாள், என்றும் இரவு பகல் பாராமல் அவளின் மகனாகிய தனக்கு எவ்வேளையும் பணிவிடைகள் புரிவாள் என்றும் கூறுகிறாள். இவ்வாறு தனக்கு எந்தக் குறையும் வைக்காமல் வளர்த்தெடுத்த தாய் உயிருடன் இல்லையே என ஏங்கி அந்த தாய் நினைவால் தான் அழுவதாகவும் கவிஞர் மிக உருக்கமாகக் கூறுகின்றார்.

இவ்வாறு இக்கவிதையின் அடுத்த அடியில் கவிஞர்

**" அள்ளியெனை அணைத்திடுவாள் அன்பினையே சொரிவாள்**
**அருகினிலே இல்லையெனில் அழுதே தான் அழைப்பாள்**
**பள்ளிக்கு அனுப்பிவிட்டுப் பசியுடன் காத் திருப்பாள்**
**பாசத்தின் ஊற்றென்றே பெற்றவளைப் பகர்வேன்."**

எனக் கூறுகின்றார்.

தன்னை அணைத்து, அன்பினைச் சொரிந்திடுவாள். ஆம் அதிகம் முத்தம் தந்திடுவாள். அருகினிலே அவள் குழந்தையாகிய நான் இல்லையென்றால் அவள் அழுதே விடுவாள். அழுதவாறே என்னை அழைப்பாள். என்னைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு நான் பள்ளிக்கூடம் முடிந்து வரும் வரைக்கும் பசியுடன் என்னைக் காத்திருப்பாள். இதனால் பாசத்தின் ஊற்றாகப் பெற்ற தாயைப் பகர்வேன் எனப் பெரும் பரவசத்தோடு கவிஞர் கூறுவதை அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கவிஞர் அக்கவிதையின் அடுத்த அடியில்

**" இல்லாமல் போனபினே இவளருமை புரியும்**
**இருக்கின்ற போதினிலே இத்தாய்நிலை புரியா**
**சொல்லேதும் இல்லையன்றோ சொல்வதற்கிவள் உயர்வை**
**சொல்லுமுயி ரின்முதற்சொல் செகத்தினிலே அம்மா!**

எனப் பாடுகின்றார். இதன்படி தாய் உயிருடன் இருக்கின்ற போது தாயின் அருமையைப் புரிய முடியாதுள்ளது. தாய் மரணித்த பின்புதான் தாயின் அருமையைப் புரிந்து கொள்ளக கூடியதாக இருக்கின்றது எனக் கூறும் கவிஞர் தாயின் உயர்வை செப்புவதற்க்கு தகுந்த சொற்கள் கூட இல்லை என்று கூறித் தாயின் மகிமையை விபரிக்கிறார். மேலும் உலகில் கதைக்கின்ற பேசுகின்ற உயிர்களின் முதலாவது வார்த்தை அதாவது பிறந்தவுடன் "அம்மா" என்றே ஒலி எழுப்புகின்றது எனவும் கூறுகிறார்.

மேலும் " மாறாத நினைவில் மாதா" என்ற இக்கவிதையின் இறுதி அடியில் கவிஞர்.

**" உறவாடத் தாய்போன்று உயஉந்தோரும் இல்லை**
**உளமாற இவள்போல உறவாரும் இல்லை**
**மறவாத நினைவினிலே மாதாவே முதன்மை**
**மண்மீதில் மாதாவின் மகிமைக்கு நிகரில்லை."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுகின்றார். அதாவது உறவுக்கு தாயைப் போன்ற உயர்ந்தோர் யாருமே இல்லை என்றும், உளம் திருப்தியுறத் தாய்மையைப் போன்ற உறவினர் யாருமே இல்லை என்றும் கூறுகின்றார். மேலும் மறைந்து போனாலும், மறக்க முடியாத நினைவுகளில் தாயின் நினைவுதான் முதன்மையாக இருக்கின்றது, எனவும் கூறும் கவிஞர் இந்த உலகில் தாயின் மகிமைக்கு யாரும், எதுவும் நிகரில்லை எனவும் கூறுகிறார்.

அடுத்ததாக " வாட்டும் தாய் நினைவுகள் " எனும் தலைப்பிலான கவிதையிலே கவிஞர்

**" சேய்களால் இன்பமது சேர்த்திடும் இல்லாள்**
**செய்யும் உணவுகளோ சொல்லிட முடியா**
**காய்ந்த பருப்புவகை கல்லில் அரைத்து**
**கற்கண் டுப்பாகும் கனியும் சேஉப்பாள்**
**பாய்ந்து பரவிடுமே பெரிதாய் வாசம்**
**பாலில் அப்பமுமே பதமாய்ச் சுடுவாள்**
**தாயவள் காலையிலே தினமும் எனக்குத்**
**தந்த கஞ்சிக்கும் தகாதே இவைகள்."**

இவ்வாறு பாடுகின்றார். தன்னரும் மனைவி தினமும் எவ்வுளவு தான் சுவை மிகுந்த உணவுகளைத் தனக்குச் சமைத்துத் தந்தாலும், இத்தகைய சுவைமிகுந்த உணவுகளெல்லாம் தனது தாய் தினமும் தனக்குக் காலையிலே சமைத்துத் தருகின்ற கஞ்சிக்குக்கூட நிகராகாது. என்று கூறித் தன் தாயின் பாசம் மிகுந்த உணவின் மகிமையைச் செப்புகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இதே தலைப்பிலான கவிதையின் அடுத்த அடியில் கவிஞர்

**" கட்டிய மதிமுகத்தைக் கண்டு களிப்பேன்**
**காலை சோதரிகளைக் காணச் செல்வேன்**
**தொட்டில் குழந்தையையும் தூக்கி மகிழ்வேன்**
**தீரா இன்பத்தில் திளைத்து நிற்பேன்**
**பட்டினி உயிர்கள் தம் பசியகற் றிடுவேன்**
**பாடல் இனிமையிலே பரவச முறுவேன்**
**கட்டிக் கரும்பையுமே களிப்பாய்ச் சுவைப்பேன்**
**கண்ணயர்ந் திடவேதாய் நினைவெனை வாட்டும்."**

எனப் பாடுகின்றார்

அதாவது தன் மனைவியாலும், தன் குழந்தையாலும், சகோதரியாலும் இனிமையான பாடல்களாலும், இனிமையான உணவுகளாலும் அதிகம் இன்புறுவேன். இத்தகை இன்பத்தின் மத்தியிலே தான் தூங்குகின்ற போது தனது தாயினுடைய நினைவு வந்து தன்னைப் பெரிதும் வாட்டும் என்கிறார். இதன் மூலம் தன் தாயின் மீது தான் கொண்டுள்ள பெரும் பாசத்தை வெளிப்படுத்துகின்றார்.

மேலும் " வாட்டும் தாய் நினைவு" என்ற இந்தக் கவிதையின் அடுத்த அடியில் கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் பின்வருமாறு பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" சந்திர முகத்தெந்தன் சோதரி காண்பேன்**
**சந்தோ சமுகத்தில் சங்கமம் ஆவேன்**
**செந்தமிழ்ச் சொல்லழகுச் சிறுகதை படிப்பேன்**
**சொந்தப் புத்திரிகள் சொல்லதனில் மகிழ்வேன்.**
**அந்தரத் தெழிலான அரிவையர் காண்பேன்**
**அன்பாய் உறவினரை அணைத்தே களிப்பேன்**
**அந்தப் பொழுதினிலும் அன்னை நினைவால்**
**அங்கம் சோர்ந்துபோய் அழுதே துடிப்பேன்."**

என்கிறார். சந்திரனைப்போன்ற அழகிய முகத்தினையுடைய தன் சகோதரிகளின் அந்த முகத்தின் அழகில் சங்கமம் ஆகின்ற பொழுதிலும், அழகிய சிறுகதை வாசித்து அதன் இரசனையில் மூழ்கிய பொழுதிலும், தன்னுடைய பெண் குழந்தைகளின் சொல்லழகில் மகிழ்ச்சியுறுகின்ற பொழுதினிலும், விண்ணுலக தேவதைகளைப் போன்ற அழகிய பெண்களைக் காண்கின்ற பொழுதினிலும், அன்பான உறவினர்களைக் கண்டு சந்தோசமுறுகின்ற அந்த வேளையிலும் தன் தாயினுடைய நினைவு தனக்கு வருகின்ற போது தன் அங்கமெல்லாம் சோர்ந்து போய், அழுது துடிக்கும் அளவுக்குத் தான் ஆளாகிப் போவதாகக் கூறித் தனது தாயின் மீது கொண்ட மேலான பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு தாய்மை உணர்வுகளில் அதிகம் ஊறிப்போன கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் " புனிதம் நிறைந்த என்தாயே" என்ற தனது மற்றொரு கவிதையில் மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாய்மை உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இக்கவிதையின் முதலாவது அடியில்

**" அன்பை நெஞ்சில் விதைத்திட்டாய்**
**அடக்கம் பேணப் பணித்திட்டாய்**
**பண்பாய் வாழ வழிவகுத்தாய்**
**பாசம் மிகைத்த என் தாயே"**

என்று பாடுகின்றார். பிறரிடமும், பிற உயிர்களிடத்தும் அன்பாய் இருக்க வேண்டிய தன்மையையும், அடக்கமாக நடந்து கொள்ள வேண்டிய நிலையையும், நல்ல பண்பையும் தனக்கு ஊட்டியது தன்மீது பாசம் மிகைத்த தனது தாய்தான் என்றுகூறித் தன் தாயின் மீதான தன் பாசத்துணர்வைக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்..

" புனிதம் நிறைந்த என்தாயே" என்ற தலைப்பிலான கவிஞரின் கவிதையின் அடுத்த அடியில்

**" களவைக் கனவிலும் கலையென்றாய்**
**கல்விக் கலையில் தேறென்றாய்**
**உளத்தில் தூய்மை பேணென்றாய்**
**உண்மை உருவின் என்தாயே"**

எனப் பாடுகின்றார். களவை வெறுக்கவும், கல்வியில் நாட்டம் கொள்ளவும், உளத்தில் தூய்மையைக் காக்கவும் பணித்த தனது தாய் " உண்மையின் உருவாக" உலகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கிறாள் எனக் கூறித் தன் தாயின் மகிமையைக் கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

மேலும் கவிஞர் இத்தலைப்பிலான கவிதையின் அடுத்த அடியில்

**" தனித்து வாழ்தல் தவிரென்றாய்**
**தயவு நாடல் விலக்கென்றாய்**
**இனிய பேச்சில் திகழென்றாய்**
**இறைமேல் பக்தி மிகுதாயே!**

எனப் பாடுகின்றார். தனித்து வாழாமல் சமூகத்துடன் சேர்ந்து வாழ் என்றும் பிறரிடம் உதவிகளை எதிர்பார்ப்பதைத் தவிர்த்து வாழ் என்றும், மக்களுடன் எப்போதும் இனிமையாக பேசு என்றும் தனக்கு
அறிவுரை பகர்ந்து வந்த தனது தாய் " இறைவன் மீது மிகவும் பக்தி மிக்கவள்" என்று புகழ்ந்துரைக்கின்றார்.

மேலும் " புனிதம் நிறைந்த என்தாயே" என்ற தலைப்பிலான இக்கவிதையில் தொடர்ந்து கவிஞர் பாடுகையில்

**" சீற்றம் தவிர்த்துத் திகழென்றாய்**
**சுற்றம் பேணிக் காரென்றாய்**
**தூற்றும் குடிவகை தவிரென்றாய்**
**தூய்மை நிறைந்த என்தாயே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடுகன்றார். கோபத்தைத் தவிர்த்து வாழுமாறும், சுற்றத்தாரைப் பேணி நடவென்றும், தீங்குநிறை மதுபானங்கள் அருந்தும் காரியத்தைச் செய்யாதே என்றும் தன்னைப் பணித்து வளர்த்த தாயானவள் " தூய்மை நிறைந்தவள் " என்று போற்றிப் புகழுகின்றார்.

இதேபோல் இக்கவிதையில் தொடர்ந்தும் கவிஞர்

**" பிறரின் பிழையைக் பொறுவென்றாய்**
**பொய்மை முற்றாய்த் தவிரென்றாய்**
**புறத்தைப் பெரிதும் வெறுவென்றாய்**
**புனிதம் நிறைந்த என்தாயே!**

எனப் பாடுகின்றார். மற்றவர்கள் தனக்கிழைக்கும் பிழைகளை எல்லாம் பொறுத்துக் கொள்ளுமாறும், வாழ்வில் பொய் பகர்தலைத்

தவிர்த்து நடக்குமாறும், பிறரைப் பற்றிய புறம் பேசுவதை முற்றாகத் தவிர்த்து நடக்குமாறும் தன்னைப் பணித்த தன்தாய் " புனிதம் நிறைந்தவள்" என வாழ்த்தி மகிழ்கின்றார்.

அதிக தாய்மை உணர்வில் ஒன்றிப்போன கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் "புனிதம் நிறைந்த என் தாயே" என்ற தலைப்பிலான இக்கவிதையில் தொடர்ந்தும் பாடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" வன்முறை யாவும் விலக்கென்றாய்**
**வாக்கை வகையாய்க் காரென்றாய்**
**துன்பம் சகித்து வாழென்றாய்**
**தூய்மை காத்த என்தாயே"**

என்கிறார். அதாவது வன்முறையெனும் கொடுஞ்செயல்களை வாழ்வில் தவிர்த்து நடக்குமாறும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறும், வாழ்வில் வருகின்ற துன்பங்களையெல்லாம் பொறுமையாக ஏற்று நடக்குமாறும் தன்னைப் பணித்த தனது தாய் தூய்மை மிக்கவள் என்று கவிஞர் பெருமிதப்படுகின்றார்.

இத்தலைப்பிலான கவிதையில் மேலும் கவிஞர்

**" மார்க்க நெறியில் நடவென்றாய்**
**மறுமை நினைவில் நிலையென்றாய்**
**பார்வை பேணிக் காரென்றாய்**
**பாசம் என்னில் மிகுதாயே"**

எனப்பாடுகின்றார். மார்க்கம் இயம்புகின்ற நெறியின் படி நடக்குமாறும், இவ்வுலகை விட்டுப் பிரிந்த பின்பு வருகின்ற மறுமை வாழ்வு பற்றிய நினைவில் இருக்குமாறும், தீய விடயங்களைப் பார்க்காமல் பார்வையைப் பேணிக் கொள்ளுமாறும் தனக்கு வழிகாட்டிய தனது தாயானவள் தன்னில் பாசம் மிகைத்தவளாக இருக்கின்றாள் எனக்கூறி மகிழ்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் " புனிதம் நிறைந்த என்தாயே " என்ற இத்தலைப்பிலான கவிதையில் கவிஞர்

**" சரிதை நன்கு அறியென்றாய்**
**சான்றோர் நெறியில் நில்லென்றாய்**
**பரந்த நோக்கில் பாரென்றாய்**
**பண்பு காத்த என்தாயே"**

எனப் பாடுகன்றார். சரித்திரங்களை நன்கு அறிந்து கொள்ளுமாறும் சான்றோர்களின் நெறியைப் பின்பற்றி நடக்குமாறும், எல்லா விடயங்களையும் பரந்த நோக்குடன் சிந்தித்துப் பார்க்குமாறும் கூறி. தனக்கு வழிகாட்டிய தனது தாய் "பண்பு நெறி காத்தவள்" எனக் கூறிக் கவிஞர் பெருமைப்படுகின்றார்.

இவ்வாறெல்லாம் தாய்மை உணர்வில் ஓங்கிய கவிஞர் இக்கவிதையின் இறுதியடிக்கு முன்பான தன் கவிதை வரியில்

**" தாரணி தனிலே தவறாகத்**
**தாயே! நடவேன் சத்தியமாய்**
**பூரண மாக இறைகாத்தே**
**புவியில் வாழச் செய்திடுவான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மிகவும் உருக்கமாகப் பாடுகின்றார். தன் வாழ்விலே தனக்கு எல்லா வகையிலும் நன்னெறி காட்டி வந்த தனது தாய் மரணித்து விட்டாலும், அந்தத் தாயின் மீது கொண்ட பற்றுதலின் காரணமாக அத்தாயின் மீது சத்தியமிட்டுக் கவிஞர் கூறுகின்றார். இந்த உலகத்தில் தான் ஒரு போதும் தவறாக நடக்க மாட்டேன் என்று கூறுகின்றார். நேரிய நெறி நடக்கத் தனக்கு இறைவனும் அருள் புரிவான் என உறுதியாகக் கூறுகின்றார்.

இக்கவிதையின் இறுதி அடியில் கவிஞர்

**" இதயம் என்னில் இருந்ததனால்**
**இறையை நீயும் மறந்திருப்பாய்**
**இதனால் உலகில் என்செயலால்**
**இலங்கும் நன்மை உனக்குரித்து"**

எனக் கூறுகின்றார். அதாவது தனது தாய் தன் மீது கொண்டிருந்த பெரும் பாசத்தின் காரணமாக, அவளுடைய இதயத்தை அதாவது அவள்தன் உள்ளத்தை தன்மீது அதாவது புதல்வனாகிய தன்னை

நினைத்தபடியே வைத்திருந்ததனால் சிலவேளை தன்தாய் இறைவனை மறந்திருக்கலாம். அதனால் தன் செயலால் அதாவது கவிஞர் உலகில் செய்யும் காரியங்களால் ஏற்படும் நன்மைகள் யாவும் தனது தாய்க்கே தான் உரித்துடையது எனக் கூறித் தனது தாய்மை உணர்வின் உச்சநிலையை உலகிற்குணர்த்திக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறெல்லாம் அதிகூடிய தாய்மை உணர்வின் உச்சத்தில் திகழ்ந்த கவிஞர் எஸ்.எல்.எம் முகைதீன் "அருள்புரிவாய் இறையோனே" என்ற தனது கவிதையில்

**சின்னஞ் சிறுவயதில் என்பிழைதனைச்**
**சிந்தைக் கெடுக்காமல் மன்னித்தே**
**என்னை வளர்த்ததாய்தந் தையர்களது**
**எல்லாப் பிழையும்இறை யேபொறுப்பாய்"**

என இறைஞ்சுகிறார். ஆம் சிறுவயதில் தான் செய்த பிழைகளையெல்லாம் மன்னித்துத் தன்னை வளர்த்தெடுத்த தனது தாய் தந்தையர்களது சகல குற்றங்களையும் மன்னித்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சுகின்றார். இதன் மூலமும் தனது தாய்மை உணர்வைக் கவிஞர் மிக மேலாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன்னதமே பெற்று உலகத்தின் சொர்கமென
நன்றாம் புகழில் நிலைத்திட்ட - அன்னையர்தம்
மேன்மையைப் பாவாய் மொழிந்தார் கவிமுகைதீன்
நான் ஆய்ந்தேன் அன்னதை நாடி.

மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-9-9

ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org